# 1 பட்டத்து இளவரசன்!

எனது அருமைத் தோழர்களே! தோழியர்களே!

வணக்கம்.

கல்லும் மண்ணும் கதை சொல்லத் தொடங்கிய காலந்தொட்டு, புகழ் மண்டிக்கிடக்கிறது நமது தாயகம் என்று அடிக்கடி நம் பள்ளியில் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள் அல்லவா?

அத்தகைய சிறப்புப்பெற்ற நமது நாட்டிலே, மங்களபுரி, மங்களபுரி என்று ஒரு நாடு இருந்தது.

மங்களபுரியின் சிறப்புக்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், அந்நாட்டின் அவைப்புலவர் பாடிய பாடலொன்றின் கருத்தைச் சொன்னாலே போதும்! “மங்களம் ஆட்சி புரியும் நாடு அது” என்று பாடியிருக்கிறார் அந்தப் புலவர் பிரான். இதிலிருந்தே அந்நாட்டின் பெருமை புரிகிறதல்லவா?

இப்படிப்பட்ட சீரும் சிறப்பும் கொண்ட நாட்டிலே விஜயசிம்மன் என்று ஓர் அரசன் ஆண்டு வந்தான். ஆட்சிக்குழு, அமைச்சரவை, அந்தரங்க ஆலோசனைச்சபை, அறநெறி அமைப்பு என்று பலவகைப்பட்ட பிரிவுகளால் இயங்கிவந்தது அரசாட்சி, மன்னனது உயிர்ப்பான நெறிமுறை அரசினால்தான் அந்நாடு உயர்வடைகிறதென்னும் பழம் பாடலுக்கு ஒப்ப இந்த விஜயசிம்மன் ஆண்டு வந்தான்.



மந்திரங்கள் ஒலித்தன.

முகூர்த்த வேளை நெருங்கியது.

பட்டத்து இளவரசன் விஜயேந்திரன், புரோகிதர் பணிவுடன் நீட்டிய மங்கலத் தாலியைக் கையில் ஏந்தி,



இதைக்கேட்ட சடுதியில் ராஜவல்லி தன் கைப் பிடிப்பிலிருந்த அந்தத் தாலியை எடுத்து விஜயேந்திரனிடம் நீட்டி, “இந்தாருங்கள் அத்தான்!... உங்கள் கரங்களால் எனக்குத் தாலி கட்டுங்கள் முதலில்!” என்று மீண்டும் கெஞ்சினாள்.

அதேகணத்தில், போர்முரசம், அபாய அறிவிப்பின் உச்சக்கட்டத்தின் நிலையை அறிவிக்கும் வகையில் முழங்கிற்று.

அவ்வளவுதான்!

இளவரசன் புரவிமீது தாவிஏறிக் குந்திக்கொண்டு கையில் வேலும் கேடயமும் ஏந்திப் புறப்பட்டான்.

கஜேந்திரபாகுவின் உடல் களைத்த நேரத்தில், அவன் தரப்பைச் சேர்ந்த ஆள் ஒருவன் தந்திரத்துடன் விஜயேந்திரன் முதுகின்மீது கள்ளக் கத்தி ஒன்றைச் சொருக எத்தனித்தான்.

ஆனால் என்ன ஆச்சரியம்!

கள்ளக் கத்தியும் கையுமாக நின்ற அதே ஆள் அடுத்த இமைப்பொழுதில் தலைகுப்புற, குருதி கொப்புளிக்க மண்ணிலே சாய்ந்து விட்டான்.



அடுத்த கணத்தில், அவ்விளைஞன் தனது அழகிய கண்களால் சிரித்தபடி, கையிலிருந்த கோப்பையை இளவரசனிடம் கொடுத்தான். திராட்சைரசம் அதில் இருந்தது. வாசனை அற்புதமாக இருந்தது.

இளவரசனுக்கு இருந்த பசிக்கிறக்கத்தில் அதை ஆர்வத்துடனும் நன்றியறிதலுடனும் வாங்கி ஒரே மடக்கில் குடித்தான்.

இமை கொட்டும் பொழுதுகூட கழிந்திருக்காது.

